FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்றவியல் தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

DS/IC/VAC/DKL 8213027

1. District : திண்டுக்கல் PS: V4 AE Year: 2025 FIR No.: 15/25 Date: 24.12.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Act 1988 as amended the Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 21.12.25 at 11.15hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 22.12.25 at 01.45 hrs

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 07.45 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.12.25 நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time : 08.45 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.12.25 நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 4 K.M தெற்கு திசை
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : விரிவாக்க அலுவலர் அலுவலகம், சமூக நல பிரிவு, ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திண்டுக்கல்.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. பிரியதர்ஷன் (b) Father's/ Husband's Name : மோர்முத்து (வேட)
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1996 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Field Engineer (g) Address : 1/185, AD காலனி, V. மீனாட்சிபட்டி, நாகிநாயக்கன்பட்டி (PO), திண்டுக்கல் தாலுகா, திண்டுக்கல்.
தொழில் TATA Communication, Dindigul முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திருமதி. உமா, விரிவாக்க அலுவலர், சமூக நல பிரிவு, ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Priyadharsan 24/12/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

JR 24/12/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.12.25 at 10.35hrs

Name: பெயர் ஜெ. ஜோதிராணி,
Rank: நிலை ..... No. எண் .....
காவல் ஆய்வாளர்,
உ.தா.க. பாவு,
தீண்டுக்கல்.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:15/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 24.12.2025-ம் தேதி காலை 07.45 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல், திண்டுக்கல் கிழக்கு தாலுகா, நரசிங்கபுரம் (Post), V.கல்லுப்பட்டி, கதவு எண்.1/185 ல் வசிக்கும் திரு.மாரிமுத்து(லேட்) மகன் M.பிரியதர்ஷன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று இன்று 24.12.2025-ம் தேதி காலை 08.45 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்.M.பிரியதர்ஷன், த/பெ.மாரிமுத்து(லேட்),கதவு எண்.1/185, AD காலனி, V.கல்லுப்பட்டி, நரசிங்கபுரம் (Post), திண்டுக்கல் கிழக்கு தாலுகா, திண்டுக்கல். பெறுநர். உயர்திரு.DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் BE படித்துள்ளேன். நான் தேவேந்திரகுல வேளாளர்-ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவன். நானும் திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், வெள்ளோடு கிராமம், மேற்குத்தெரு கதவு எண்.9/129 என்ற முகவரியில் வசிக்கும் கிறிஸ்தவ (வன்னியர்) வகுப்பைச்சேர்ந்த திரு.தங்கராஜ் என்பவரது மகள் செல்வி.ரோஸ்லின் சாரா என்பவரை காதலித்து 17.08.2023-ம் தேதி கலப்பு திருமணம் செய்து கொண்டேன். எங்களது திருமணம் திண்டுக்கல் மாவட்டம் நாகல்நாயக்கன்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 21.11.2023-ம் தேதி பதிவு எண் 15/2023-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. கலப்புத்திருமணம் செய்தவர்களுக்கு சமூக நலத்துறையால் வழங்கப்படும் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகை ரூ.50,000/- மற்றும் 8 கிராம் தங்கம் பெறுவதற்காக எனது மனைவி திருமதி.ரோஸ்லின் சாரா பெயரில் விண்ணப்பம் தயார் செய்து திண்டுக்கல் கிழக்கு தாலுகா அலுவலகத்தில் உள்ள இ சேவை மையத்தின் மூலம் 13.07.2024-ம் தேதி விண்ணப்பித்தேன். அதற்காக ஒப்புகைச்சீட்டு எண் 20240100001778 வழங்கப்பட்டது. அதன்பின்பு விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை திண்டுக்கல் ஊராட்சி ஒன்றிய சமூக நலத்துறை அலுவலகத்தில் விரிவாக்க அலுவலர் திருமதி.உமா அவர்களிடம் நேரில் சென்று கொடுத்தேன். அப்போது அவர் என்னுடைய அலைபேசி எண்ணை கேட்டு மேற்படி விண்ணப்பத்தில் குறித்துக்கொண்டார். பின்பு 10

நாட்கள் கழித்து 23.07.2024 ம் தேதி மாலை சுமார் 06.30 மணிக்கு 91596 03038 என்ற மொபைல் எண்ணிலிருந்து எனது மொபைல் எண் 82488 24259 க்கு அழைப்பு வந்தது. அதில் பேசிய நபர் சமூகநலத்துறை விரிவாக்க அலுவலர் திருமதி.உமா என்றும் நான் சமர்ப்பித்த ஆவணங்கள் சம்பந்தமாக அலுவலகம் வந்து கையொப்பம் செய்ய வேண்டியது இருக்கும் என்று கூறினார். அதன்பின்பு கடந்த ஒரு வருடமாக எந்த அழைப்பும் வரவில்லை. எனவே நான் அவ்வப்போது இணையதளம் மூலம் மேற்படி விண்ணப்பத்தின் நிலையை தெரிந்து கொள்வதற்காக பார்த்த போது கடந்த 13.09.2024-ம் தேதி என்னுடைய விண்ணப்பம் Approved என்று வந்தது. ஆனால் தற்போது வரை உதவித்தொகை மற்றும் தங்க நாணயம் கிடைக்க பெறவில்லை. இதற்கிடையில் கடந்த 20.12.2025-ம் தேதி காலை சுமார் 10.58 மணிக்கு அதே மொபைல் எண் 91596 03038 லிருந்து எனது மொபைல் எண்ணுக்கு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை நான் எடுத்து பேசிய போது அதில் பேசியவர் சமூக நல விரிவாக்க அலுவலர் உமா என்றும் திண்டுக்கல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சமூக நல விரிவாக்க அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் உங்களுடைய விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு உதவித்தொகை மற்றும் தங்க நாணயம் ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதனால் உங்கள் இருவருடைய ஆதார் கார்டு, பான் கார்டு, வங்கி கணக்குப்புத்தகம், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவற்றை கொண்டு வந்து அலுவலகத்தில் கொடுக்கமாறும் கூறினார். பின்பு மறுநாள் 21.12.2025ம் தேதி காலை 08.41 மணிக்கு சமூகநல விரிவாக்க அலுவலர் திருமதி.உமா அவர்கள் என்னை மீண்டும் அலைபேசியில் தொடர்பு கொண்டு ஏன் அலுவலகம் வரவில்லை என்று கேட்டுவிட்டு, காலை 11.00 மணிக்கு அவசியம் அலுவலகம் வந்து ஆவணங்களை கொடுக்குமாறு கூறினார். நான் அவரிடம் மேடம் இன்று ஞாயிற்றுக்கிழமை அலுவலகம் உள்ளதா என்று கேட்டேன். அதற்கு அவர் நான் இன்று அலுவலகம் வருகிறேன், நீங்கள் வாருங்கள் என்று கூறினார். பின்பு நானும் எனது மனைவி ரோஸலின் சாராவும் காலை சுமார் 11.15 மணியளவில் திண்டுக்கல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அமைந்துள்ள சமூகநல விரிவாக்க அலுவலர் திருமதி.உமா அவர்களின் அலுவலகத்திற்கு சென்று அவர் கேட்ட ஆவணங்களை நான் கொடுத்தேன். அப்போது அவர் நான் கொடுத்த வங்கிகணக்கு புத்தகத்தை மட்டும் என்னிடம் திருப்பிக்கொடுத்து விட்டு UCO வங்கியில் கணக்கு வைத்திருக்கக்கூடாது என்றும் ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் எனது பெயரிலும் எனது மனைவியின் பெயரிலும் கூட்டுகணக்கு தான் வைத்திருக்க வேண்டும் என்றும் கூறினார். பின்பு என்னிடம் ஒரு படிவத்தை கொடுத்து அதில் Stamp ஒட்டி எங்கள்

இருவரையும் கையொப்பம் செய்யுமாறு கூறினார். நாங்கள் இருவரும் அதில் கையொப்பம் செய்தோம். ஆனால் தேதி குறிப்பிடவில்லை. அப்போது அவர் பணம் ரூ.6,000/- கொடுக்குமாறு கூறினார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் மேலும் இந்தப்பணம் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா என்றும் கேட்டேன். அதற்கு அவர் உங்களுடைய விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுத்து உங்களுக்கு உதவித்தொகை மற்றும் தங்க நாணயம் கிடைக்க ஏற்பாடு செய்வதற்காக எனக்கு கொடுக்க வேண்டிய பணம் என்று கூறினார். நானும் பணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். அப்போது அவர் மறுநாள் பணம் ரூ.6,000/- மற்றும் வங்கிகணக்கு புத்தகத்தின் நகல் ஆகியவற்றை கொண்டு வந்து கொடுக்குமாறு கூறினார். பின்பு 22.12.2025-ம் தேதி காலை திண்டுக்கல் சாலை ரோட்டில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் ஏற்கனவே எனது மனைவி பெயரில் இருந்த வங்கிகணக்கில் என்னுடைய பெயரை கூட்டாக சேர்த்து அந்த வங்கிக்கணக்கு புத்தகத்தின் நகலை கொடுப்பதற்காக மதியம் சுமார் 01.00 மணிக்கு சமூநல விரிவாக்க அலுவலர் திருமதி.உமா அவர்களின் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு அவர் இல்லை. எனவே 01.12 மணிக்கு நான் அவருக்கு போன் செய்தேன். அவர் போனை எடுத்து வெளியில் சென்றிருப்பதாகவும் அரை மணி நேரத்தில் அலுவலகம் வந்துவிடுவதாகவும் தெரிவித்தார். அதனால் நான் அங்கேயே காத்திருந்தேன். அதன்பின்பு 01.48 மணிக்கு விரிவாக்க அலுவலர் அலுவலகம் வந்துவிட்டதாக என்னை போனில் அழைத்து கூறினார். அதன்பின்பு அவரை சந்தித்து வங்கிகணக்கு புத்தகத்தின் நகலை கொடுத்தேன். அப்போது அவர் அதைப் பெற்றுக்கொண்டு நான் கேட்ட பணம் ரூ.6,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்றும், மிகுந்த சிரமத்தில் இருப்பதாகவும் கொஞ்சம் குறைத்துக்கொள்ளும்படியும் கேட்டேன். அதற்கு அவர் சரி என்று சொல்லி ரூ.3,000/- த்தை குறைத்து கொண்டு ரூ.3,000/- ம் கொடுக்குமாறு கூறினார். நான் தற்போது என்னிடம் பணம் இல்லை, ரெடி பண்ண வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் பணத்தை ரெடி பண்ணிவிட்டு நாளைக்கோ, நாளை மறுநாளோ காலை அலுவலகத்தில் வந்து கொடுக்குமாறும், நான் மீண்டும் போன் பண்ணமாட்டேன் என்று கறாராக கூறினார். நான் TATA communication நிறுவனத்தில் திண்டுக்கல்லில் field engineer ஆக பணிபுரிந்து வருவதால் நான் யோசனை செய்ததில் தமிழக அரசால் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் கலப்புத்திருமணம் செய்தவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை மற்றும் தங்க நாணயம் பெறுவதற்கு ரூ.3,000/- லஞ்சமாக கொடுக்க

எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.3,000/- லஞ்சமாக கேட்ட சமூகநல விரிவாக்க அலுவலர் திருமதி.உமா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த புகாருடன் நான் கடந்த 13.07.2024ம் தேதி இ சேவை மையத்தில் விண்ணப்பித்த ஒப்புகைசீட்டு எண் 20240100001778-ன் நகலையும், கலப்புதிருமண சான்றின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும் சமூகநல விரிவாக்க அலுவலர் திருமதி.உமா அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.3,000/-ம் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (M.Priyadharson, 24.12.2025)

Sir, Received the complaint on 24.12.2025 at 07.45 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.15/25, u/s.7(a) of P.C Act 1988, as amended in 2018, on 24.12.2025 at 08.45 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 24.12.2025)

Original FIR along with written complaint of Tr.M.Priyadharson, S/o.Tr.Marimuthu(late), Door No.1/185, AD Colony, V.Kallupatty, Narasingapuram (Post), Dindigul East Taluk, Dindigul and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Judge Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

24/12/25

(J.Rupa Geetharani),
Inspector of Police,
V&AC,
Dindigul